ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1989/10 - 2016 ඔක්තෝබර් මස 18 වැනි අඟහරුවාදා - 2016.10.18

1989/10 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பிலக்கம்: LND/ AQUIS/1/02

வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கு சொந்தமான தப்போவ சரணாலயத்தில் அமைந்துள்ள தனியார் காணியினை வனவிலங்குகளின் பாதுகாப்பு நடவடிக்கைகள் நிமித்தம் எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், வண்ணாத்திவில்லு பிரதேச செயலகப் பிரிவில் 637/3 ஆம் இலக்க கரடிபூவல் கிராம உத்தியோகத்தர் பிரிவில், கரடிபூவல் கிராமத்தில் அமைந்துள்ளதும், புத்தளம் மாவட்ட நில அளவை அதிபதியினால் 2016.04.29 என திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்டதுமான இல. FTP 22 ஆம் ஆரம்ப நில அளவை வரைபடத்தில் இல. 8200 எனக் குறிக்கப்பட்ட காணித் துண்டின் 4.0090 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ள பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் காணிப் பகுதியாகும்.

வடக்கு: கரத்தை வழி; கிழக்கு: FTP 22 இன் 1821 ஆம் இலக்க காணித் துண்டு; தெற்கு: FTP 22 இன் 1826, 1827 மற்றும் 1828 ஆம் இலக்க காணித் துண்டுகள்; மேற்கு: FTP 22 இன் 1819 ஆம் இலக்க காணித் துண்டு.

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு வண்ணாத்திவில்லு பிரதேச செயலகத்தில் என்முன்பாக தோன்றும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சஞ்சீவனி ஹேரத்,
பிரதேச செயலாளர்,
வண்ணாத்திவில்லு.

பிரதேச செயலகம்,
வண்ணாத்திவில்லு,
2016, ஒற்றோபர் 11.

11 - 83